மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : வருவாய்த்துறை ஒரு பகுதியாகவும், வளர்ச்சித்துறை ஒரு பகுதியாகவும் இருக்க வேண்டுமென்ற கருத்து அந்த மகாநாட்டில் கலந்துகொண்டவர்களாலும், மற்றவர்களாலும் தெரிவிக்கப் பட்டது. கொள்கை அளவில் அதை ஏற்றுக்கொண்டு, அதைப்பற்றி ஆராய நிர்வாகச் சீர் அமைப்புக் குழுவினர் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். அவர்களது அறிக்கை வந்த பிறகு மேற்கொண்டு அதுபற்றி முடிவு மேற்கொள்ளப்படும்.

Widening of Ramakrishna Mutt Road

* 163 *Q.*—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) the total area acquired from private parties for the widening of the Ramakrishna Mutt Road, Mylapore, Madras near Luz; and

(*b*) the details of the compensation paid therefor?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஐந்து மனைகளும் 709 சதுர அடியும் கையகப்படுத்தப்பட்டன.

(இ) பேரவை முன் விவர அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டுள்ளன.

நகரப் பஞ்சாயத்துக்களுக்கு துப்புரவு ஆய்வாளர்கள்

* 164. **வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா?

மேஜர் பஞ்சாயத்துக்களுக்கு சானிடரி இன்ஸ்பெக்டர்கள் நியமிக்கப் பட்டுள்ளார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஆம்.

திரு. என். கிட்டப்பா : அது எப்போது முதல் செயல்பட இருக்கிறது என்பதுபற்றி அரசு அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நமது மாநிலத்தில் 112 துப்புரவாய்வாளர்கள் ஊராட்சி, நகராட்சி ஒன்றியங்களில் பணிபுரிந்து வருகிறார்கள். எந்த எந்த ஊராட்சிகளில் துப்புரவு ஆய்வாளர்கள் இல்லையோ

@ 296–299-ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

1972 டிசம்பர் 14]

அங்கெல்லாம் ஊராட்சி நிர்வாக அதிகாரிகள் அந்தப் பணியினை மேற்கொண்டு செயல்படுகிறார்கள். ஆனால் துப்புரவாளர்களை போட்டுக்கொள்ளக்கூடிய நிதி வசதியுடைய ஊராட்சி ஒன்றியங்கள் அதுபற்றி வேண்டுமென்று கேட்டால் பரிசீலனை செய்யலாம் என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : ஊராட்சி மன்றங்களில் பணிபுரியும் துப்புரவாய்வாளர்கள் மன்றத் தலைவர்களின் ஆணைகளை மதிக்காமல் செயல் பட்டு வருவதை அரசு அறியுமா? ஆகவே துப்புரவாய்வாளர்களை மன்றத்தின் நேரடி நிர்வாகத்தின்கீழ் இ.ஓ., பெருந்தலைவர் ஆகியவர்களின் கட்டுப் பாட்டுக்கு உட்படுத்த அரசுக்கு உத்தேசம் உண்டா? மன்றம் ஏகோபித்து ஒரு தீர்மானம் போட்டால் அந்த இடத்தில் உள்ள துப்புரவாய்வாளரை உடனடி யாக அந்த இடத்தை விட்டு மாற்ற நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : துப்புரவாய்வாளர்களின் பணிகளைக் கட்டுப்படுத்தி வேலை வாங்கிக் கொள்கிற பொறுப்பு ஊராட்சி ஒன்றியத் தலைவர், ஆணையாளரிடம்தான் இருக்கிறது. எங்காவது மதித்து நடக்காமல் இருக்கிறார்கள் என்றால் அது நல்வாழ்வுத்துறையின் கவனத்திற்குக் கொண்டு வரப் பட்டால் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும். காரணம் இன்றைக்கு அவர்களை நியமிக்கிற பொறுப்பினை நல்வாழ்வுத்துறை தான் வைத்துக் கொண்டிருக்கிறது.

சென்னை மாநகரிலுள்ள சிலைகள் பராமரிப்பு

**165. வினா—புலவர் சி. பழனிச்சாமி :* மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை நகரில் உள்ள சிலைகளை எல்லாம் அடிக்கடி சுத்தம் செய்வதற்கு மாநகராட்சி மூலம் பணியாளர்களை நியமிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

புலவர் சி. பழனிச்சாமி : வள்ளுவர், காந்தியடிகள், அண்ணா போன்றவர் களின் சிலைகளில் உட்கார்ந்து பறவைகள் எச்சமிட்டு அசுத்தப்படுத்துகின்றன. அதைப் பார்க்கும்போதே மனதிற்கு வேதனையாக இருக்கிறது. எனவே மாதத்திற்கு ஒரு முறை, இருமுறை அவைகளைச் சுத்தம் செய்ய அரசு ஆவன செய்யுமா?